# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in

**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 20 /2018**

பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர்,
C/o ஸ்டீபன் & ஸ்டீபன் அட்வகேட்ஸ் & அசோசியேட்ஸ்,
எண்.16, கார்பரேஷன் ஷாப்பிங் காம்பிளக்ஸ் 3வது அவென்யூ,
இந்திரா நகர்,
சென்னை– 600 020. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. N. செந்தில் விஸ்வரூபன்,
வழக்கறிஞர்)

எதிர்

செயற் பொறியாளர்/O&M/நெகமம்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/22 கே.வி. நெகமம் பவர் ஹவுஸ் வளாகம்,
நெகமம் – 642 102. . . . எதிர்மனுதாரர்
(திரு. R. சுரேஷ், செயற்பொறியாளர் /நெகமம்)

**கேட்புரை நாள் : 31–7–2018**

**ஆணை நாள் : 10.11.2018**

பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர், C/o ஸ்டீபன் & ஸ்டீபன் அட்வகேட்ஸ் & அசோசியேட்ஸ், எண்.16, கார்ப்பரேஷன் ஷாப்பிங் காம்பிளக்ஸ், 3வது அவென்யூ, இந்திரா நகர், சென்னை– 600 020 அவர்களின் 30.04.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.20/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 31.7.2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளரின் பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் தொழிற்சாலைக்கு மும்முனை மின்இணைப்பு கிடைத்திட ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம் :

2.1 மேல்முறையீட்டாளரின் நிறுவனமான பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் மத்திய அரசின் நடுத்தர, சிறு மற்றும் குறுந்தொழில்கள் அமைச்சகத்தின் SFRUTI SCHEME திட்டத்தின் கீழ் மத்திய அரசாலும் மாநில அரசாலும் அங்கீகரிக்கப்பட்ட மேற்கூறிய அமைச்சகத்தின் நிதி பங்களிப்புடன் கூடிய நிறுவனமாகும்.

2.2 கடந்த 13.2.2017ல் திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், புளியம்பட்டி கிராமம் சர்வே எண்கள் 85/2 மற்றும் 84/1ல் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு புதிய மும்முனை மின் இணைப்பு வேண்டி உதவி பொறியாளர் /இபே/ காமநாயக்கன்பாளையம் பிரிவில் விண்ணப்பிக்கப்பட்டது. இவ்விண்ணப்பத்திற்கான விண்ணப்பக்கட்டணம் மற்றும் காப்புத்தொகை இரண்டும் சேர்த்து ரூ.67,250/– கடந்த 4.4.2017ல் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

2.3 மேல்முறையீட்டாளரின் தொழிற்சாலையும் ஏற்கெனவே சர்வே எண்.85/2ல் உள்ள SHAA PITH MEDIA என்ற தனி நபருடைய தொழிற்சாலையும் ஒரே மாதிரியானவை என்ற காரணத்திற்காகவும் மற்றும் நிறுவனத்தை சுற்றி அமைத்துள்ள வேலி நிரந்தரமானதல்ல என்ற காரணத்திற்காகவும் புதிய தாழ்வழுத்த LT மின் இணைப்பு வழங்க இயலாது என்றும் உயர்அழுத்த HT மின்இணைப்பு பெற்றுக் கொள்ளுமாறும் உதவிப்பொறியாளர் / காமநாயக்கன்பாளையம் அவர்கள் 31.5.2017 தேதியிட்ட கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

2.3 இது சம்பந்தமாக தலைவர், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு அவர்களிடம் 19.7.2017 நாளிட்ட மேல்முறையீட்டாளரின் முறையீட்டுடன் அனைத்து ஆவணங்களையும் இணைத்து புதிய மின் இணைப்பு வழங்கிட ஆவண செய்யுமாறு மனுச் செய்யப்பட்டது. கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/தெற்குவின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 7.8.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது.

மன்றத்தின் ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார்.

## 3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/தெற்குவின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 7.8.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் முடிவுரை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>உத்தரவு :</u>*

*மன்ற முன்னிலையில் விவாதிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலும்,*

*மனுதாரர் எதிர்மனுதாரர் ஆகிய இருதரப்பினரின் கருத்துக்கள் மற்றும் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படியும் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் கீழ்கண்ட நிலைபாட்டினை ஆய்வு செய்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.*

*1) திருமதி. சர்மிளா அவர்களால் (ஷாபித் மீடியா கம்பெனி) திருமதி. ஜலஜா அவர்களிடமிருந்து குத்தகை மூலம் பெறப்பட்ட பூமியில் (க.ச.எண்.85/2–1.90 ஏக்கர்) தொழிற்சாலை மின்இணைப்பு 7.6.2001 அன்று பெறப்பட்டு பயன்பாட்டில் உள்ள நிலையில் அதே க.ச.எண்ணில் உள்ள 1.55 ஏக்கர் பூமியை M/s பல்லடம் காயர் க்ரோ பேக் கிலெஸ்டர் என்ற நிறுவனம் திருமதி. ஜலஜா அவர்களிடமிருந்து குத்தகை மூலம் பெறப்பட்டதாக கூறப்படும் ஆவணத்தை M/s.பல்லடம் காயர் க்ரோ பேக் கிலெஸ்டரின் உரிமை சான்றாக எடுத்துக் கொள்ள இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி இடத்தில் தொழிற்சாலை மின்இணைப்பு கோரியுள்ளளது ஏற்க இயலாததாலும்,*

*2) மனுதாரர் தற்போது மின்இணைப்பு கோரும் பகுதியில் ஏற்கனவே ஒரு தொழிற்சாலை மின்இணைப்பு வழுங்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கும் நிலையிலும் ஏற்கனவே மின்இணைப்பு வழுங்கப்பட்ட பூமியில் தற்போது மின் இணைப்பு கோரும் பூமிக்கும் நிரந்தர தடுப்பு ஏதுமின்றி தனித்தனி வழித்தடம் ஏதுமின்றி தொடர்ச்சியான நிலமாக உள்ளதாலும்,*

*3) நிரந்தர தடுப்பு அமைக்கப்பட்டாலும் ஒரு நபருக்கு அல்லது ஒரு நிறுவனத்திற்கு ஒரே தொழில் அல்லது சார்ந்த தொழில் நடத்துவதற்கு தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பு 27(15எ)ன்படி ஒரு வீதப்பட்டியலில் ஒரு மின்இணைப்பு மட்டுமே வழுங்க இயலும் என்பதாலும்,*

*தமிழ்நாடு மின் ஒழுங்குமுறை ஆணைய வழிகாட்டுதலின்படியும் மின் வழுங்கல் மற்றும் மின் விநியோக விதித்தொகுப்பில் கண்டுள்ள உத்தரவின்படியும் M/s.பல்லடம் காயர் க்ரோ பேக் கிலெஸ்டர், புளியம்பட்டி கிராமம், 111.7 கி.வ. மின் பளுவுடன் கூடிய தாழ்வழுத்த தொழிற்சாலை மின் இணைப்பு வழுங்க இயலாது எனவும், மனுதாரரது தொழிற்சாலைக்கு மின்இணைப்பு*

*தேவைப்படின் உயர்மின் அழுத்த மின்இணைப்பு பெற்றுக்கொள்ள வேண்டுமாயும் இம்மன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. ”*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>**

**4.1** மேல்முறையீட்டாளர் அவருடைய நிறுவனமான பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் மத்திய அரசின் நடுத்தர சிறு மற்றும் குறுந்தொழில்கள் அமைச்சகத்தின் SFRUTI SCHEME திட்டத்தின் கீழ் மத்திய அரசாலும் மாநில அரசாலும் அங்கீகரிக்கப்பட்ட மேற்கூறிய அமைச்சகத்தின் நிதி பங்களிப்புடன் கூடிய நிறுவனமாகும். மேலும், எங்கள் நிறுவனம் 15 அங்கத்தினர்களைக் கொண்ட சங்கமாக (SOCIETY) பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

**4.2** கடந்த 13.2.2017ல் திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், புளியம்பட்டி கிராமம் சர்வே எண்கள் 85/2 மற்றும் 84/1ல் அமைந்துள்ள எங்களது தொழிற்சாலைக்கு புதிய மும்முனை மின் இணைப்பு வேண்டி உதவி பொறியாளர் /இ.பே/தமிழ்நாடு மின்சார வாரியம், காமநாயக்கன்பாளையம் அவர்களுக்கு விண்ணப்பித்திருந்தேன்.

**4.3** இவ்விண்ணபத்திற்கான விண்ணப்பக்கட்டணம் மற்றும் காப்புத்தொகை இரண்டும் சேர்த்து ரூ.67,250/– கடந்த 4.4.2017ல் மின் வாரியத்திற்கு செலுத்தியுள்ளேன்.

**4.4** எங்களது விண்ணப்பம், எங்களது தொழிற்சாலையும் ஏற்கெனவே சர்வே எண்.85/2ல் உள்ள SHAA PITH MEDIA என்ற தனி நபருடைய தொழிற்சாலையும் ஒரே மாதிரியானவை என்ற காரணத்திற்காகவும் மற்றும் நாஙகள் எங்கள் நிறுவனத்தை சுற்றி அமைத்துள்ள வேலி நிரந்தரமானதல்ல என்ற காரணத்திற்காகவும் புதிய தாழ்வழுத்த LT மின் இணைப்பு வழஙக இயலாது என்றும் உயர்அழுத்த HT மின்இணைப்பு பெற்றுக் கொள்ளுமாறும் உதவிப்பொறியாளர்/ காமநாயக்கன்பாளையம் அவர்கள் 31.5.2017 தேதியிட்ட கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

**4.5** இது சம்பந்தமாக தலைவர் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு அவர்களிடம் 19.7.2017 நாளிட்ட முறையீட்டுடன் அனைத்து ஆவணஙகளையும் இணைத்து எஙகளுக்கு புதிய மின் இணைப்பு வழஙகிட ஆவன செய்து தருமாறு மனுச் செய்திருந்தோம். எங்களது மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு கடந்த 15.7.2017 அன்று மாலை 3.00 மணியளவில் விசாரணைக்கு ஆஜராகும்படி கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டு நாஙகள் நேரில் ஆஜராகி விசாரணையில் கலந்துகொண்டோம். இதன் பின்னர் கடித எண்.செபொ/இபே/நெகமம்/தொநுஉ/கோ.CGRF/அ.எண்.384/2017 நாள் 12.7.2017 மூலம் எங்களுக்கு புதிய மின் இணைப்பு வழஙக இயலாது என தெரிவிக்கப்பட்டது. ஆகவே, தாஙகள்

எங்கள் மனுவினை ஏற்றுக்கொண்டு புதிய மின்இணைப்பு வழங்கிட ஆவண செய்து தர வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

## 5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 The petitioner required new LTCT Industrial service connection for SF No.85/2 and 84/1, Pulliampatti. But, TNERC Act 27(15A) a person or an establishment or an entity shall be given only one service connection in a premises or in contiguous premises to run a business or service or occupation or another form of activity including its associated activities and for the activities of the associate even if there is a permanent physical segregation. The petitioner was advised to apply for HT service connection.

5.2 The Exe. Engineer/O&M/Negamam refused the request of the petitioner based on the TNERC Act 27(15A) and also TNERC Act section 2, subsection 3, 1D the service connection load exceeding the 112 KW, the consumer has to apply only High Tension (HT) service connection.

5.3 Also the land lease from Tmty. Jallaga, M/s (Shaa pith media Company) as per SF No.85/2 at 1.90 Acre the service connection has already issued on 7.6.2001 for the same purpose. Hence, the land of 1.55 Acre for same SF leased for M/s Palladam Coir grow bag cluster is not taken for evidence. Hence, the service connection request is not in order. The petitioner now requested the service connection land and already service connection located in the land is physically not segregated and there is no separate entrance.

5.4 Hence, the physical segregation arrangement is made it but, as per TNERC 27(15A) one person or one concern or same manufacturing or manufacturing concern only one service connection is admitted for one tariff. Hence, the request for new service connection of petitioner is refused. It is respectively prayed that the honourable Electricity Ombudsman may be pleased to set aside the appeal petition.

**6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>**

**6.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **31.7.2018** அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

**6.2** M/s Palladam coir grow bag cluster சார்பாக திரு. N. செந்தில் விஸ்வரூபன், வழக்கறிஞர் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**6.3** எதிர்மனுதாரர் சார்பில் திரு. R. சுரேஷ், செயற்பொறியாளர்/நெகமம் அவர்கள் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**7. <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

**7.1** மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

**7.2** மேலும் மேல்முறையீட்டாளரின் தொழிற்சாலையும் ஏற்கெனவே சர்வே எண்.**85/2**ல் உள்ள SHAA PITH MEDIA என்ற தனி நபருடைய தொழிற்சாலையும் வெவ்வேறு நிறுவனங்கள் என்று வாதிட்டார். M/s Palladam coir grow bag cluster நிறுவனம் **15** அங்கத்தினர்களைக் கொண்ட சங்கமாக (SOCIETY) பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். ஆனால் SHAA PITH MEDIA என்ற நிறுவனம் ஒரு தனி நபருக்கு சொந்தமான (Single Proprietorship) நிறுவனம் என்றும் ஆதலால் இரு வேறு நிறுவனங்களை எதிர்மனுதாரர் ஒரே நிறுவனங்கள் என்று வாதிடுவது தவறு என்று வாதிட்டார்.

**7.3** மேல்முறையீட்டாளரின் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் மட்டுமே ஒரே நபருக்கு சொந்தாமானதென்றும் ஆனால் இரு நிறுவனங்களும் வேறு விதமான பொருட்களை உற்பத்தி செய்வதாகவும் தெரிவித்தார். மேலும் இது சம்பந்தமாக SHAA PITH MEDIA என்ற நிறுவனம் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மற்றும் M/s Palladam coir grow bag cluster நிறுவனம் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் சமர்ப்பித்து SHAA PITH MEDIAவில் உரிமையாளராகிய திருமதி.சர்மிளா என்பவர் சங்கமாக (SOCIETY) பதிவு செய்யப்பட்ட M/s Palladam coir grow bag cluster நிறுவனத்தின் ஒரு உறுப்பினர் மட்டுமே ஆவார் என்றும் எதிர்மனுதாரர் வாதிடுவதுபோல் இரண்டும் ஒரே நிறுவனங்கள் அல்ல என்றும் வாதிட்டார்.

7.4 இரண்டு தொழிற்சாலைகளும் ஒரே சர்வே எண்.85/2ல் அமைந்திருந்தாலும் மேல்முறையாட்டாளரின் தொழிற்சாலைக்கு தனியாக நுழைவுப்பாதை உள்ளதாகவும் இரு தொழிற்சாலைகளுக்கு நடுவில் கம்பி வேலியமைத்து தனித்தனியாக செயல்படுவதாகவும் தெரிவித்தார். ஆனால் பொருட்கள் ஏற்றுவது மற்றும் இறக்குவதற்கு மட்டுமே இரண்டு தொழிற்சாலைகளுக்கும் உள்ள பொதுவான பாதையை பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார். மேலும் எதிர்மனுதாரர் இரண்டு நிறுவனங்களுக்கிடையே நிலையான தடுப்பு (Permanent Physical Segregation) இல்லையென்று வாதிடுவதால் இரண்டு நிறுவனங்களுக்கிடையே நிலையான தடுப்பு அமைத்துக்கொள்வதாகவும் ஆகவே அவரது தொழிற்சாலைக்கு தனியாக ஒரு தாழ்வழுத்த மின் இணைப்பு வழஙகுமாறு கேட்டுக்கொண்டார்.

## 8. <u>கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார். மேலும் கேட்புரை நாளில் கீழ்கண்ட வாதங்களை எடுத்துரைத்தார்.

8.2 SHAA PITH MEDIA மற்றும் M/s Palladam coir grow bag cluster ஆகிய இரு நிறுவனங்களும் ஒரே நிர்வாகியால் நடத்தப்படுவதாகவும் மேலும் இரு நிறுவனங்களும் தென்னைநார் சம்பந்தப்பட்ட பொருட்களையே உற்பத்தி செய்வதாகவும் வாதிட்டார்.

8.3 மேலும் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27 (15A) ன் படி ஒரே கதவிலக்கம் / சர்வே எண்ணில் ஒரு மின்னிணைப்பு மட்டுமே வழஙக முடியும் என்று வாதிட்டார். மேலும் தன்னுடைய கள ஆய்வின்போது இரு நிறுவனங்களுக்கிடையே ஒரு நிலையான தடுப்புச்சுவர் அமைத்து அவை தனித்தனி வளாகங்களாக அமைக்கப்படவில்லையென்றும் இரு நிறுவனங்களும் ஒரே பாதையைத்தான் பொதுவாக பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார். ஆகையால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என்றும் மேல்முறையீட்டாளர் விரும்பினால் உயர் மின்னழுத்த இணைப்பு வழஙகுவதாகவும் தெரிவித்தார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் வாதங்களை கருத்தில் கொண்டால் மேல்முறையீட்டாளரின் பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் தொழிற்சாலைக்கு

தாழ்வழுத்த மும்முனை மின்இணைப்பு தரவேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையதுதானா என்பதாகும்.

**9.2** மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் அவருடைய M/s Palladam coir grow bag cluster என்ற நிறுவனம் 15 அங்கத்தினர்களைக் கொண்ட சங்கமாக (SOCIETY) பதிவு செய்யப்பட்ட நிறுவனமென்றும் ஆனால் SHAA PITH MEDIA என்ற நிறுவனம் ஒரு தனி நபருக்கு சொந்தமான (Single Proprietorship) நிறுவனம் என்றும் ஆகையால் எதிர்மனுதாரர் குறிப்பிடும் ஒழுங்குமுறை விதி அவருடைய விண்ணப்பத்திற்கு பொருந்தாதென்றும் வாதிட்டுள்ளார்.

**9.3** எதிர்மனுதாரர் SHAA PITH MEDIA மற்றும் M/s Palladam coir grow bag cluster ஆகிய இரு நிறுவனங்களும் ஒரே நிர்வாகியால் நடத்தப்படுவதாகவும் மேலும் இரு நிறுவனங்களும் தென்னைநார் சம்பந்தப்பட்ட பொருட்களையே உற்பத்தி செய்வதாகவும் வாதிட்டார். மேலும் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27 (15A) ன் படி ஒரே கதவிலக்கம் / சர்வே எண்ணில் ஒரு மின்னிணைப்பு மட்டுமே வழங்க முடியும் என்றும் வாதிட்டுள்ளார்.

**9.4** எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27(15A)–ஐ குறிப்பிட்டு மேல்முறையீட்டாளருக்கு புதிய தாழ்வழுத்த மின் இணைப்பை வழங்க இயலாது என்று வாதிடுவதால் அதுபற்றி அறிய தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 14, 15 மற்றும் (15A) –ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது

*27.Requisitions for Supply of Energy:*

*(14) Where more than one person or more than one establishment is or intended to be in occupation of a door number or sub door number, more than one service connection will be given only if there is a permanent physical/ electrical segregation of areas for which different service connections are applied for.*

*(15) In case of flat system and shopping complexes where more than one flat or shops are located with permanent physical segregation, more than one service shall be given.*

*(15A) Notwithstanding anything contained in sub-regulations (14) and (15), a person or an establishment or an entity shall be given only one service connection in a premises or in*

*contiguous premises to run a business or service or occupation or another form of activity including its associated activities and for activities of the associates even if there is a permanent physical segregation.*

9.5 மேற்கண்ட விதி 27(14) ன் படி ஒரு கதவிலக்கத்தின் அல்லது துணைக்கதவிலக்கத்தில், ஒன்றுக்கும் மேற்பட்ட நபரோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனமோ குடியிருக்கும் பொழுது அல்லது குடியிருக்க முற்பட்டாலோ பல மின்னிணைப்புகளுக்கு விண்ணபத்த நேர்வுகளில் அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடஙகளில் தனித்தனி மின்பிரிவுகள் இருப்பின், ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்றும்,

விதி 27(15)ன்படி அடுக்குமாடி வீடுகளையும் வணிக வளாகஙகளையும் பொருத்தவரையில், ஒன்றுக்கும் மேற்பட்ட அடுக்ககஙகளோ கடைகளோ வெளிப்படையாக நிரந்தரமாகப் பிரித்துவைக்கப்பட்டிருந்தால் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்றும்,

மற்றும் விதி 27 (15A) ன் படி (14) மற்றும் (15) ஆம் ஒழுஙகுமுறைவிதிகளில் எப்படி இருந்தபோதிலும், ஒரு நபர் அல்லது நிறுவனம் அல்லது தனித்தன்மையான நிறுவனம் ஆகியவற்றிற்கு ஒரு வளாகத்தில் அல்லது சேர்ந்திருக்கும் வளாகஙகளில், அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்பட்ட இடஙகளாக இருந்தாலும், ஒரு தொழிலுக்கோ அல்லது சேவைக்கோ அல்லது பணிக்கோ அல்லது அதன் ஐக்கிய பணி நடவடிக்கைகள் உட்பட வேறுவிதமான அமைப்பில் இருக்கும் நடவடிக்கைகளுக்கோ, மற்றும் சார்ந்தவர்களின் பணிகளுக்கோ, ஒரே ஒரு மின்னிணைப்பு மட்டுமே தரப்படும் என்றும் அறியமுடிகிறது.

9.6 இவ்வழக்கில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் நிறுவனமும் மற்றும் SHAA PITH MEDIA ஆகிய இரு நிறுவனஙகளும் ஒரே நிர்வாகியால் நடத்தப்படுவதாகவும் மேலும் இரு நிறுவனஙகளும் தென்னைநார் சம்பந்தப்பட்ட பொருட்களையே உற்பத்தி செய்வதாகவும் வாதிட்டுள்ளார். மேலும் இரு நிறுவனஙகளுக்கிடையே ஒரு நிலையான தடுப்புச்சுவர் அமைத்து அவை தனித்தனி வளாகஙகளாக அமைக்கப்படவில்லையென்றும் இரு நிறுவனஙகளும் ஒரே பாதையை பொதுவாக பயன்படுத்துவதால் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27 (15A) ன் படி ஒரே கதவிலக்கம் / சர்வே எண்ணில் ஒரு மின்னிணைப்பு மட்டுமே வழஙக முடியும் என்றும் வாதிட்டுள்ளார்.

9.7 எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27–ஐ மேற்கோள் காட்டி வாதிடுவதால் இரு நிறுவனஙகளின் செயல்படும் தன்மை மற்றும் பணிகள் குறித்து ஆராய இவ்வழக்கில்

சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்து கீழ்க்கண்டவைகள் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

1) சர்வே எண். 85/2ல் இருக்கும் பூமியான 1.90 ஏக்கரை திருமதி. ஜலஜா அவர்களால் 23.11.2015 அன்று முதல் திருமதி. சர்மிளா (நிர்வாகி ஷாபித் மீடியா கம்பெனி)அவர்களுக்கு பதிவு செய்யப்படாத ஆவணத்தின்படி 16 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அதே சர்வே எண்.85/2ல் உள்ள 1.90 ஏக்கரில் ஆவண எண்.2220/2016ன்படி 0.35 ஏக்கர் பூமியை உரிமையாளரான திருமதி ஜலஜா அவர்கள் தன்வசம் வைத்துக்கொண்டு 1.55 ஏக்கர் பூமியை M/s பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் நிறுவனத்திற்கு குத்தகை விடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

2) கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி ஷாபித் மீடியா கம்பெனி என்ற நிறுவனம் ஒரு தனி நபரின் சொந்த நிறுவனமாகும். பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் என்பது 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் பிரிவு 10ன்படி பதிவு செய்யப்பட்ட 15 உறுப்பினர்கள் கொண்ட சங்கமாகும். இரு நிறுவனங்களும் சட்டப்படி தனித்தனி நிறுவனங்களாகும். எனவே, இரு நிறுவனங்களும் ஒரே நிர்வாகியால் நடத்தப்படுவதாகவும் ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளதாகவும் இருக்கிறது என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதல்ல. மேலும் ஒரே பாதையை பொதுவாக பயன்படுத்துவதால் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27 (15A) ன் படி ஒரே கதவிலக்கம் / சர்வே எண்ணில் ஒரு மின்னிணைப்பு மட்டுமே வழங்க முடியும் என்ற வாதமும் ஏற்புடையதல்ல.

3) ஆனால் இவ்வழக்கில் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான அம்சம் விதி 27(14) ன் படி ஒரு கதவிலக்கம் அல்லது துணைக்கதவிலக்கத்தில், அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடங்களாகவும் மற்றும் தனித்தனி மின்பிரிவுகளாக இருப்பின் (*permanent physical / electrical segregation of areas)*, ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும் என்பதாகும்.

4) SHAA PITH MEDIA மற்றும் M/s Palladam coir grow bag cluster ஆகிய இரு நிறுவனங்களும் சர்வே எண்.85/2 ல் திருமதி ஜலஜா என்பவருக்கு சொந்தமான பூமியில் குத்தகை ஒப்பந்த அடிப்படையில் அமைந்துள்ளன. ஆனால் ஷாபித் மீடியா

கம்பெனியுடனான 15 வருட குத்தகை ஒப்பந்தம் பதிவு செய்யப்படாததாயும் மற்றும் சர்வே எண்.85/2 ல் ஷாபித் மீடியா கம்பெனி எந்த பகுதியில் அமைந்துள்ளது என்பது பற்றியோ அல்லது அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு மற்றும் நில எல்லைகள் பற்றிய சொத்து விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதேசமயம் பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் என்ற சங்கத்திற்கு வழங்கியுள்ள பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்த ஆவண எண்.2220/2016ன்படி 0.35 ஏக்கர் பூமியை உரிமையாளரான திருமதி ஜலஜா அவர்கள் தன்வசம் வைத்துக்கொண்டு 1.55 ஏக்கர் பூமியை 15 வருடத்திற்கு வாடகைக்கு விடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5) மேலும் பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் என்ற சங்கத்திற்கு வழங்கியுள்ள பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்த ஆவண எண்.2220/2016ன்படி ஷாபித் மீடியா கம்பெனி என்ற பெயரில் வழங்கப்பட்ட தொழிற்சாலை மின்னிணைப்பு எண்.236–009–311–ஐ பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் தேவைப்படின் கூடுதல் மின்பளு பெற்றக்கொள்ளலாம் என்பதும் மிகவும் முரண்பாடாக உள்ளது. ஆனால் 0.35 ஏக்கர் பூமியை உரிமையாளரான திருமதி ஜலஜா அவர்கள் தன்வசம் வைத்துக்கொண்டு மீதமுள்ள 1.55 ஏக்கர் பூமியை 15 வருடத்திற்கு பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் என்ற சங்கத்திற்கு வாடகைக்கு விடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டால் ஷாபித் மீடியா கம்பெனி எந்த இடத்தில் செயல்படுகிறது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. மேலும் மின்னிணைப்பு எண்.236–009–311 ஆனது தற்பொழுது போடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டரின் உபயோகத்தில் உள்ளதா என்பது பற்றியும் அந்த மின்னிணைப்பு எந்த இடத்தில் அமைந்துள்ளது என்பது பற்றிய தெளிவான விவரத்தையும் மேல்முறையீட்டாளரோ அல்லது எதிர்மனுதாரரோ தெளிவுபடுத்தவில்லை.

9.8 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் தொழிற்சாலைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு தனியாக ஒரு மும்முனை மின்இணைப்பு வழங்கலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

1) தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27 (14) ன் படி இரு நிறுவனங்களும் நிரந்தரமாக புறநிலை தனிமைப்படுத்தப்பட்ட இடங்களாகவும் மற்றும் தனித்தனி மின்பிரிவுகளாக

(*Permanent physical / Electrical segregation of areas)* அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

2) சர்வே எண்.85/2–ல் அமைந்துள்ள இரு நிறுவனங்களின் எல்லைகளும் தெளிவாக வரையறுக்கப்பட்ட சொத்து விபரம் (Schedule Property) கொண்ட திருத்தப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்தம் பெற்றிருக்க வேண்டும்.

**10. கவனிப்பாய்வு**

**10.1** ஷாபித் மீடியா கம்பெனியும் பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் நிறுவனமும் வெவ்வேறு நிறுவனங்கள் என்று எதிர்மனுதாரர் வாதிடுகிறார். ஆனால், பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் என்ற சஙகத்திற்கு வழஙகியுள்ள பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்த ஆவண எண்.2220/2016–ன்படி ஷாபித் மீடியா கம்பெனி என்ற பெயரில் வழஙகப்பட்டுள்ள தொழிற்சாலை மின் இணைப்பு எண்.236–009–311–ஐ பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் தேவைப்படின் கூடுதல் மின் பளு பெற்றுக் கொள்ளலாம் என்றுள்ளதால் அந்த மின்னிணைப்பு தற்பொழுது மேற்படி நிறுவனத்தின் பயன்பாட்டில் உள்ளதா என்பதின்பால் எதிர்மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**11. <u>முடிவுரை</u>**

**11.1** பத்தி 9–ல் உள்ள தீர்வின்படி எதிர்மனுதாரர்கள் பத்தி 9.8 ல் குறிப்பிட்டுள்ள திருத்தஙகளை மேல்முறையீட்டாளர் நிறைவு செய்துவிட்டாரா என்று உறுதி செய்தபின் பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர் தொழிற்சாலைக்கு தனியாக ஒரு மும்முனை மின்இணைப்பு வழஙகலாம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.2** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.20/2018 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) பல்லடம் காயர் க்ரோ பேக் கிளஸ்டர்,
C/o ஸ்டீபன் & ஸ்டீபன் அட்வகேட்ஸ் & அசோசியேட்ஸ்,
எண்.16, கார்பரேஷன் ஷாப்பிங காம்பிளக்ஸ் 3வது அவென்யூ,
இந்திரா நகர், சென்னை– 600 020.

2)  செயற் பொறியாளர்/O&M/நெகமம்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/22 கே.வி. நெகமம் பவர் ஹவுஸ் வளாகம்,
நெகமம் – 642 102.

3)  மேற்பார்வை பொறியாளர்  பொறியாளர்,
கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத்,
கோயம்புத்தூர் – 641  012.

4)   தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) –    **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.